தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை

மானியக் கோரிக்கை எண்.30

# எழுதுபொருள் மற்றும் அச்சு

## அறிவிப்புகள்
## 2026 – 2027

**ராஜ்மோகன்**

பள்ளிக் கல்வி, தமிழ் வளர்ச்சி,
செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்

**எழுது பொருள் மற்றும் அச்சு**

**விரைவு துலங்கல் குறியீடு/**

QR Code

**இணையதளம்**

https://www.stationeryprinting.tn.gov.in

# எழுதுபொருள் மற்றும் அச்சு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, அரசின் மக்கள் நலப்பணிகளுக்கு வலு சேர்க்கும் வகையில், எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையின் வளர்ச்சிக்கும், நவீனமயமாக்கலுக்கும் வழிவகுக்கும் சிறப்புமிக்க ஆறு புதிய அறிவிப்புகளை வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

**எழுத்தின் வலிமை பெருகட்டும்;**
**அச்சின் பயன்பாடு சிறக்கட்டும்!**

**ராஜ்மோகன்**
**பள்ளிக் கல்வி, தமிழ் வளர்ச்சி,**
**செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர்**

1. அச்சிட்ட பொருட்களையும், அச்சிடுவதற்கான பொருட்களையும் பாதுகாக்க சென்னை, அரசு மைய அச்சகத்தில் 15 ஆயிரம் சதுர அடி பரப்பளவில் ரூபாய் 7.3 கோடி செலவில் புதிய கிடங்கு கட்டப்படும்.

சென்னை அரசு மைய அச்சகத்தில் அச்சுப் பொருட்கள் மற்றும் அச்சடிக்கப்பட்ட பொருட்களை பாதுகாப்பாக வைக்கவும், பராமரிக்கவும் நவீன மற்றும் பாதுகாப்பு வசதிகளுடன் கூடிய காகித கிடங்கு மற்றும் பொது பண்டக சாலை ஆகியவை 15 ஆயிரம் சதுர அடி பரப்பளவில் நவீன வசதிகளுடன் ரூ.7.3 கோடி மதிப்பில் கட்டப்படும்.

## 2. அதியுயர் ஆற்றலோடு அச்சுப் பணிகளை நிர்வகிக்க ஒருங்கிணைந்த அச்சு மேலாண்மை அமைப்பு முறைமை செயற்படுத்தப்படும்.

எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையில் அச்சிட தேவையான மூலப்பொருட்கள், கொள்முதல், அச்சுப்பணிகள், விநியோகம், அச்சு இயந்திர பராமரிப்பு, கழித்தொதுக்கம் உள்ளிட்ட பணிகளை ஒருங்கிணைத்து சீராகவும் செம்மையாகவும் மேற்கொள்ள ஏதுவாக ஒருங்கிணைந்த அச்சு மேலாண்மைத் திட்டம் (Comprehensive Printing Management System) செயல்படுத்தப்படும். இதன்மூலம் அரசு மைய அச்சகம் மற்றும் கிளை அச்சகங்களில் அச்சுப்பணிகள் உரிய காலத்தில் தரத்துடன் மேற்கொள்ளப்பட்டு, மேம்படுத்தப்பட்ட சேவையை கேட்புத் துறைகளுக்கு வழங்கிட இயலும்.

3. பணியிடை விபத்தினை தவிர்த்து பணியாளர் நலன் காக்க சென்னை அரசு மைய அச்சகத்திற்கு ரூபாய் 86 இலட்சம் செலவில் நிரலாக்க தானியங்கி காகிதம் வெட்டும் இயந்திரம் நிறுவப்படும்.

அரசு மைய அச்சகத்தில் நவீன அச்சு இயந்திரங்கள் மூலம் அரசு வரவு–செலவு பணிகள், பல்கலைக்கழக விடைத்தாள்கள், அரசு தேர்வு துறையின் விடைத்தாள்கள், e–Permit போன்ற அதிமுக்கியமான அச்சிட்ட பணிகளை பாதுகாப்பாகவும், துல்லியமாகவும், விரைவாகவும் வெட்டுவதற்கு சென்னை அரசு மைய அச்சகத்திற்கு ஒரு புதிய நிரலாக்க தானியங்கி காகிதம் வெட்டும் இயந்திரம் (Programmable Cutting Machine) ரூ.86 இலட்சம் மதிப்பில் கொள்முதல் செய்யப்படும்.

**4. அச்சகப் பணிகளுக்கு முதுகெலும்பாக விளங்கும் பணியாளர்களின் நலன் காக்க, அச்சகப் பொருட்களை இலகுவாக இயக்க Battery Pallet Trucks, Fork Lift & Hydraulic Trolleys ரூபாய் 29 இலட்சம் செலவில் அரசு அச்சகங்களுக்கு கொள்முதல் செய்யப்படும்.**

அச்சகங்களில் கையாளப்படும் அச்சுப் பொருட்கள், காகிதங்கள் மற்றும் அச்சுப் பணி முடிவுற்ற ஆவணங்களை ஒரு பிரிவிலிருந்து மற்றொரு பிரிவிற்கு எடுத்துச் செல்லவும், காகித கிடங்கிலிருந்து இயந்திரப்பிரிவிற்கு காகித உருளைகளை பாதுகாப்புடன், எளிதாகவும், விரைவாகவும் எடுத்துச் செல்ல, அரசு மைய அச்சகத்திற்கு Heavy Duty Battery Pallet Truck ஒன்று

ரூ.6.2 இலட்சம் மதிப்பிலும், மதுரை அரசு கிளை அச்சகத்திற்கு Fork Lift ஒன்று ரூ.18 இலட்சம் மதிப்பிலும் மற்றும் சென்னை அரசு மைய அச்சகத்திற்கு மூன்று, அரசு கிளை அச்சகம் மதுரை, திருச்சி, விருத்தாசலம் தலா இரண்டு மற்றும் அரசு கிளை அச்சகம் சேலத்திற்கு ஒன்று என 10 Hydraulic Trolley–கள் ரூ.4.8 இலட்சம் மதிப்பிலும், ஆக மொத்தம் ரூ.29 இலட்சம் மதிப்பில் கொள்முதல் செய்யப்படும்.

**5. மேலான தொழில்நுட்பங்களுடன் அரசு அச்சகங்களை நவீனப்படுத்திட நுட்பமான Baking இயந்திரம், Automatic Pasting and Strapping இயந்திரம் மற்றும் Numbering இயந்திரங்கள் ரூபாய் 14.3 இலட்சம் செலவில் கொள்முதல் செய்யப்படும்.**

Baking இயந்திரத்தை நிறுவுவதன் மூலம், அச்சுத் தகடுகளில் அச்சு படிமத் தரத்தை உயர்த்தி, கூடுதல் பிரதிகள் அச்சிட இயலும். எனவே, மதுரை அரசு கிளை அச்சகத்திற்கு Baking இயந்திரம் ஒன்று ரூ.4.5 இலட்சம் மதிப்பிலும், சேலம் அரசு கிளை அச்சகத்திற்கு காகித கட்டுகளை நேர்த்தியாகவும், எளிதாகவும், விரைவாகவும் கட்டுவதற்கு ஒரு Automatic Pasting and Strapping இயந்திரம்

ரூ.3.8 இலட்சம் மதிப்பிலும், மதுரை, அரசு கிளை அச்சகத்தில் Seed Certificate எண்களை பதிவிடும் பணிக்காக, Numbering இயந்திரம் ஒன்று ரூ.6 இலட்சம் மதிப்பிலும் என மொத்தம் ரூ.14.3 இலட்சம் மதிப்பில் கொள்முதல் செய்யப்படும்.

**6. அரசு அச்சகங்களில் காகிதங்கள் / படிவங்களை சீராக பேணிக் காத்து அச்சுப்பணிகளை மெச்சும் வகையில் மேற்கொள்ள ரூபாய் 15 இலட்சம் செலவில் அடுக்கு மேடைகள் கொள்முதல் செய்யப்படும்.**

அரசு அச்சகங்களில் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கான காகிதங்கள் மற்றும் அச்சிட்ட படிவங்களை பாதுகாப்பாகவும், நேர்த்தியாகவும் அடுக்கிப் பராமரித்திடவும், ஒரு பிரிவிலிருந்து மற்றொரு பிரிவிற்கு எளிதாக எடுத்து செல்லவும், சென்னை, அரசு மைய அச்சகத்திற்கு 50, மதுரை, விருத்தாசலம், திருச்சி, சேலம் மற்றும் புதுக்கோட்டை

ஆகிய அரசு கிளை அச்சகங்களுக்கு 300 Plastic அடுக்கு மேடைகள் ரூ.15 இலட்சம் மதிப்பில் கொள்முதல் செய்யப்படும்.

**ராஜ்மோகன்**
**பள்ளிக் கல்வி, தமிழ் வளர்ச்சி,**
**செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர்**

அரசு மைய அச்சகம், சென்னை—600 001.